செ.வெ.எண்.356/2021 நாள்.30.08.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 691 பயனாளிகளுக்கு ரூ.16.58 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.டி.எம்.கதிர்ஆனந்த் அவர்கள் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 691 பயனாளிகளுக்கு ரூ.16 கோடி 58 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத்திட்ட வீடுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.டி.எம்.கதிர்ஆனந்த் அவர்கள் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 259 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா, 432 பயனாளிகளுக்கு பிரதம மந்திரி வீடுகள் என மொத்தம் 691 பயனாளிகளுக்கு ரூ.16 கோடி 58 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத்திட்ட வீடுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கியதில் மகிழ்ச்சியடைகிறேன். மேலும் இங்கு வழங்கப்பட்டுள்ள இலவச வீட்டுமனை பட்டாக்கள் கடந்த 7 நாட்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நடவடிக்கை திட்ட இயக்குநர், திருப்பத்தூர் சார் ஆட்சியர், வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர், சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் பிரதம மந்திரி குடியிருப்புத்திட்ட வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 976 நபர்கள் விண்ணப்பித்ததுள்ளார்கள். அதனடிப்படையில் முதற்கட்டமாக 691 நபர்களுக்கு தற்போது வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் வீடுகள் அதிகளவில் வழங்கவும் மற்றும் பட்டாயில்லாமல் இருப்பவர்களுக்கும் பட்டாவும் வழங்க

நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்விழாவில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.எம்.கதிர்ஆனந்த் அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதியேற்று 110 நாட்களில் இந்தியாவே திரும்பி பார்கின்ற அளவிற்கு சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரவுபகல் தூங்காமல் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கும் அவர்களின் தொகுதிக்கு சென்று கொரோனாவை தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என ஆணையிட்டார்கள். இதன் காரணமாக தமிழ்நாட்டில் கொரோனா தொற்று கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தற்போது ஒருநாளிற்கு கொரோனா தொற்றின் எண்ணிக்கை 1500 நபர்களுக்கு என்ற நிலையில் உள்ளது. மேலும் நமக்கு அருகாமையில் இருக்கும் கேரளா மாநிலத்தில் சுமாராக 35 ஆயிரம் நபர்கள் பாதிப்படைந்துள்ளார்கள். நம்முடைய உயிரை காப்பாற்றிகொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சட்டமன்ற கூட்டத்தொடருக்கு முன்னதாகவே தாய்மார்களுக்கு இலவச பேருந்து பயணம், தாய்மார்களுக்கு உதவி தொகை, குடும்ப அடைகளுக்கு ரூ.4000/- உதவி தொகை, திருநங்கைகளுக்கு உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழக சட்டசபையில் ஒவ்வொரு மாநிய கோரிக்கைகளிலும் மாண்புமிகு அமைச்சர்கள் தங்களின் துறையில் செயல்படுத்தும் திட்டத்தை கூறியுள்ளார்கள். விவாசயிகளின் நலனை கருத்தில்கொண்டு அவர்களுடன் ஒருநாள் உடனிருந்து அவர்கள் என்னென்ன பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள் என்பதை தெரிந்துகொண்டு, அவர்களின் தேவைகளை உதவிகளை உடனடியாக செய்து கொடுக்க வேண்டும்.

இம்மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 691 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத்திட்ட வீடுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நலத்திட்ட உதவிகள் 7 நாட்களில் வழங்கப்படுகிறது என்பது பாராட்டுதலுக்குரியது. மேலும் இந்நிகழ்ச்சியை 3 மாதத்திற்கு ஒருமுறை நடத்தி புதியபுதிய பயனாளிகளை கண்டுபிடித்து இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத்திட்ட வீடுகள் வழங்க வேண்டும் என கேட்டுகொள்கிறேனர். இதன் காரணமாக தமிழ்நாட்டிலேயே அதிக இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத்திட்ட வீடுகள் வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் என்ற பெயரை எடுக்க வேண்டுமென கேட்டுகொள்கிறேனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாணவர்கள் கல்விக்கடன்கள் உரிய நேரத்தில் மாணவர்களுக்கு தடையில்லாமல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இம்மாவட்டத்தில் இல்லாத துறைகள் வெகுவிரைவில் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். முன்னாள் மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் மல்லகுண்டா பகுதியில் 1000 ஏக்கர் பரப்பளவில் தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது நிலுவையில் உள்ளது. மேலும் இதன் விவரங்களை உடன் சரிசெய்து கொடுத்தால் நான் உடனடியாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து இந்த சட்டசபையிலேயே அறிவிக்க வழியுறுத்துவேன். மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க திருப்பத்தூர் மாவட்டத்தில் டைடில் பார்க் வழங்கவும் நடிவடிக்கை எடுக்கப்படும் என வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.எம்.கதிர்ஆனந்த் அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்விழாவல் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.தேவராஜி, திரு.ஏ.நல்லதம்பி, திரு.அ.செ.வில்வநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன், திருப்பத்தூர் சார் ஆட்சியர் மரு.பி.அலர்மேல்மங்கை.இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.செல்வராசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சூரியகுமார், வேளாண் ஒழுங்கு விற்பனைகூடம் கூட்டுறவு சங்க தலைவர் திரு.ராஜேந்திரன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.விஜயன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காயத்திரி சுப்பிரமணியன், உதவி இயக்குநர்கள் திரு.அருண், உதவி திட்ட அலுவலர்கள் திரு.ரூபேஷ்குமார், திருமதி.விஜயகுமாரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**